# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.17/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவகாமி | மதம் | : இந்து |
| க/பெ | : நீலகண்டன் | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தில் நான் அனுபவத்தில் இருப்பதாகவும் வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்றும் உரிமை விளம்புகை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வழக்கில் நீதிமன்ற ஆணையர், நிலஅளவையர் நியமணம் கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் மற்றும் நிலஅளவையர் வந்து வழக்கு சொத்தை அளவீடு செய்த அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளனர் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ளார்கள் என்றால் ஆமாம். அதனால் பொன்னுசாமியை நான் 2ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் வழக்கின் பரிகாரத்தை ஒப்படைப்பு கோரி சீர்திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் வழக்கு சொத்தின் முழு விஸ்தீரணம் நான் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான்தான் அனுபவத்தில் உள்ளேன். வழக்கு சொத்தில் புல எண்.237/14Aல் எனக்கு எத்தனை செண்ட் சொந்தம் என்றால் 3 செண்ட் சொந்தம் ஆகும். மேலும் கிணறு பாகத்தை அளந்து கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி கேட்டுள்ளேன். மொத்தம் 2 சொத்தை அளந்து தர

கேட்டுள்ளேன். புல எண்.237/14Aல் 3 செண்ட் மட்டும்தான் எனது பிராது சொத்து விவரத்தில் காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். நில அளவையர் தனது அறிக்கையில் 1ம் பிரதிவாதி நாகரத்தினம் அதே புல எண்ணில் 12 செண்ட் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம்.

3. புல எண்.237/14Aல் எனக்கு எவ்வளவு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் ஞாபகமில்லை. புல எண்.237/14Aல் எனக்கு 3 செண்டிற்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். நில அளவையர் அளக்கும்போது பட்டாவை வைத்துதான் அளந்தார் என்றால் ஆமாம். எனது கிரைய ஆவணத்தின் அடிப்படையிலோ நாகரத்தினத்தின் கிரைய ஆவணத்தின் அடிப்படையிலோ நில அளவையர் அளவீடு செய்யவில்லை என்றால் ஆமாம். புல எண்.237/14C2ல் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் என் அப்பா ஏழுமலை மொத்தம் எனக்கு 63 செண்ட் எழுதி கொடுத்துள்ளார். அந்த 63 செண்ட் என் அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்றால் என் அப்பா அவரது பெரியப்பாவிடமிருந்து வாங்கியுள்ளார். அந்த 63 செண்டில் 14 செண்டை நாகரத்தினத்திடமிருந்து என் அப்பா ஏழுமலை வாங்கியுள்ளார் என்றால் இல்லை. அது வேறு சொத்து இது வேறு சொத்தாகும். அதன் புல எண் சொல்ல முடியுமா என்றால் எனக்கு புல எண் சொல்ல முடியவில்லை.

4. 26.04.2004ல் என் அப்பா ஏழுமலை புல எண்.237/14C ல் 14 செண்டை நாகரத்தினத்திடமிருந்து வாங்கியுள்ளார் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 26.04.2004ல் என் அப்பா ஏழுமலை புல எண்.237/14C ல் 14 செண்டை நாகரத்தினத்திடமிருந்து வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும் இல்லை. 1ம் பிரதிவாதி தன் கைவசம் 6 செண்டை வைத்து கொண்டுதான் என் அப்பாவிற்கு 14 செண்ட் கிரையம் கொடுத்தார் என்றால் இல்லை. என் அப்பாவிற்கு கிரையம் கொடுத்தது போக மீதியுள்ள 6 செண்ட்தான் நாகரத்தினத்தின் அனுபவத்தில் உள்ளது என்றால் நாகரத்தினம்தான் 6 செண்டில் பயிர் செய்கிறார். அந்த தேதியில் என் அப்பா கிரையம் வாங்கவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையர் மற்றும் நிலஅளவையர் அறிக்கையில் புல எண்.237/14C2ல் 6 செண்ட்டை 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார் என்றும் பொன்னுசாமி என்பவர் 3.9 செண்ட் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்

என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இருப்பதைதான் சொல்லியுள்ளார். நாகரத்தினம் தனக்கு சொந்தமான 6 செண்டில்தான் அனுபவத்தில் உள்ளார் என்றாலும் நீதிமன்ற ஆணையர் மற்றும் நிலஅளவையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அவர்கள் இருப்பதைதான் குறிப்பிட்டுள்ளார்கள்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)